பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஐப்பசி 16 சனிக்கிழமை [02-11-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 333

# சிறிய கப்பல்கள் தான் காங்கேசன் வர முடியும்

## பாதுகாப்பு பிரதேசமாக்குவதற்கான பேச்சுக்கள் நடந்து வருகின்றன

யாழ்ப்பாணம், நவ. 2

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு காங்கேசன் துறைமுகம் மூலம் உணவுப் பொருள்களை சிறிய கப்பல்களில் மட்டுமே கொண்டு வர முடியும்.

பெரிய கப்பல்கள் ஆழ்கடலில் தரித்து நின்று உணவுப் பொருள்களை இறக்குவதற்குரிய வசதிகள் காங்கேசன் துறையில் இப்போது இல்லை என்று சொல்லப்படுகிறது.

அதனால் சிறிய கப்பல்களில் பொருள்களைக் கொண்டுவந்து, அவற்றை நேரடியாகத் துறைமுகத் தளத்துக்கு (Dock) விட்டு, அங்கு வைத்து இறக்குவதே சாத்தியமானது எனக் கூறப்படுகிறது.

கப்பல்கள் மூலம் காங்கேசன் துறைமுகத்துக்கு உணவுப் பொருள்களைக் கொண்டு வருவதற்கு இணக்கம் காணப்பட்டதைத் தொடர்ந்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள், கப்பல் துறை நிபுணர்களை காங்கேசன் துறைமுகத்துக்கு

(3 ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிகளை ஒடுக்க சிறப்பு நாற்படை அமைப்பு

## ஹமில்டனுக்கு தளகர்த்தர் பதவியாம்

கொழும்பு, நவ. 2

முப்படைகளும், பொலிஸும் கொண்ட சிறப்புப் படை அமைப்பை, ஸ்ரீலங்கா அரசு மீண்டும் உருவாக்க உள்ளது.

இராணுவம், கடற்படை, விமானப்படை, பொலிஸ் ஆகிய நான்கு படைகளையும் கொண்ட இந்தச் சிறப்பு அமைப்பின் பிரதான பணி விடுதலைப் புலிகளை ஒடுக்குவதாகவே இருக்கும் என்று பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சிறப்புப் படை அமைப்பில் விசேட பயிற்சி பெற்ற இராணுவத்தினர், கடற்படையினர், விமானப் படையினர், பொலிசார் ஆகியோர் அங்கம் வகிப்பர். இது கூட்டு நடவடிக்கைப் படை (ஜே. ஓ. சி.) என்றழைக்கப்படும்.

இந்த அமைப்பின் தளகர்த்தராக—பொது ஆணை அதிகாரியாக — முன்னாள் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஹமில்டன் வனசிங்க விரைவில் பதவியேற்பார் என்று அறியப்படுகிறது.

நான்கு படைகளும் சேர்ந்த சிறப்புப் படை அமைப்பு ஒன்று முன்னரும் 1987 முதல் இயங்கி வந்தது. ஜனாதிபதி பிரேமதாசாவின் உத்தரவின்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## ராணுவத் தளபதியாக சிசில்

கொழும்பு, நவ. 2

ஸ்ரீலங்காவின் புதிய இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் சிசில் வைத்திரத்னா பதவியேற்க உள்ளார்.

இப்போதைய தளபதி லெப். ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா பதவியில் இருந்து ஓய்வு பெறவுள்ளதைத் தொடர்ந்தே சிசில் வைத்தியரத்னா நியமிக்கப்பட உள்ளார்.

மேஜர் ஜெனரல் சிசில் வைத்தியரத்னாவின் தலைமையில் இயங்கிய விசேட இராணுவப் பிரிவே ஜே. வி. பியின் முக்கிய தலைவர்களைக் கைது செய்து அதனைப் பெருமளவில் ஒடுக்கியது என்பது குறிப்பிடத்தக்கது. அந்தக் காலத்தில் தென்னிலங்கையில் சுமார் 10,000 பேர் இராணுவத்தினரால் மறைமுகமாக கொல்லப்பட்டிருந்தனர். (அ)

## ஹெலி பிரசுரம்

யாழ்ப்பாணம், நவ. 2

நேற்றுப் பிற்பகல் 2-30 மணியளவில் யாழ்ப்பாணம், நல்லூர், அரியாலை பிரதேசங்களில் ஹெலி ஒன்று துண்டுப் பிரசுரங்களை வீசியது. (உ-143-15)

மூச்சந்தி முரளி



பதவி வழங்க புதுப்படை அமைக்கினம் போலலை...!

## பூநகரியில் படையினர் மீது ஷெல் தாக்கு!

யாழ்ப்பாணம், நவ. 2

பூநகரி கரிக்கோட்டம் பகுதியில் நிலை கொண்டுள்ள ஸ்ரீலங்கா படையினர் மீது நேற்று முன் தினம் விடுதலைப் புலிகள் ஷெல் தாக்குதல்களை நடத்தியதாக அறிய வருகிறது.

படையினருக்கு பலத்த இழப்பு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## மன்னாரில் தமிழர் மீது கெடுபிடி

யாழ்ப்பாணம், நவ. 2

மன்னார் தீவில் வாழும் தமிழ் மக்கள் மீது படையினர் கெடுபிடிகளை பிரயோகிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் மக்கள் இரவு நேரத்தில் நடமாடவும், 10 வயது முதல் 40 வயது வரையுடையவர்கள் நகரை விட்டு வெளியேறவும் படையினர் தடைவிதித்துள்ளனராம். (உ-3)

# வடக்கில் தாக்குதல் இப்போதைக்கு இல்லை

கொழும்பு, நவ. 2

வடக்கில் மழை காலம் ஆரம்பித்துள்ளதால் இப்போதைக்கு பெரும் தாக்குதல் திட்டம் எதையும் தொடங்கும் சாத்தியம் இல்லை என்று பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

கைப்பற்றிய இடங்களில் தமது நிலைகளை ஸ்திரப்படுத்துவதிலேயே இராணுவத்தினர் இப்போது தீவிரமாக ஈடுபட்டுள்ளனர் என்றும் பாதுகாப்பு அதிகாரிகள் கூறியதாக பி. பி. ஸியின் கொழும்புச் செய்தியாளர் தெரிவித்தார். (அ)

## கல்முனையில் மீனவர் மீது படையினர் துப்பாக்கிச் சூடு!

பூநகரி கல்முனைக் கடற்பரப்பில் நேற்று கடற்றொழிலுக்காகச் சென்ற மீனவர்களை நோக்கி படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் மீனவர் ஒருவர் படுகாயமடைந்தார்.

கல்முனைக்கு அருகிலுள்ள பேய்த்தீவில் தரித்திருக்கும் இராணுவத்தினரே மீனவர் படகை நோக்கி துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனராம்.

படகில் சென்ற நால்வரில் மூவர் கடலில் குதித்து காயமின்றித் தப்பிக்கொண்டனர்.

குருநகரைச் சேர்ந்த ஸ்டெபிரட் ஜெயராசா (வயது 30) என்பவர் படுகாயமடைந்தார். அவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (உ-15)

## 4 இந்திய மீனவர்கள் காங்கேசன் வந்தனராம்!

சென்னை, நவ. 2

காணாமற்போன நான்கு இந்திய மீனவர்கள் காங்கேசன்துறை துறைமுகப்பகுதிக்கு வந்து திரும்பியுள்ளனராம்!

—இந்திய வானொலி நேற்று இப்படித் தெரிவித்தது.

''கடந்த சனிக்கிழமையன்று நாகபட்டினத்திலிருந்து மீன் பிடிக்கக் கடலுக்குச் சென்ற பின்னர் காணாமற்போனதாகத் தெரிவிக்கப்பட்ட நான்கு மீனவர்களும் நேற்று பாதுகாப்பாக வந்து சேர்ந்தனர்.

''கடற்கொந்தளிப்புக் காரணமாகத் தாம் சென்ற படகு இலங்கை காங்கேசன் துறை துறைமுகத்துக்குச் சென்றதாகக் கூறிய அந்த மீனவர்கள்—

''செஞ்சிலுவைச் சங்கத்தினர் 3 நாட்களுக்கு உணவும் புகலிடமும், திரும்புவதற்கு ஒரு படகும் தங்களுக்குத் தந்துதவினதாகவும் தெரிவித்தனர்'' — இப்படி இந்திய வானொலி நேற்று அறிவித்தது. (உ-த)

## தீவகப் பகுதியிலிருந்து அராலி நோக்கி ஷெல்!

தீவுப்பகுதி முகாம்களில் இருந்தும், காரைநகர் கடற்பிராந்தியத்திலிருந்தும் நேற்று முன்தினம் மக்கள் குடியிருப்புகளை நோக்கி படையினர் தாக்குதல் நடத்தினர்.

தீவுப்பகுதி முகாம்களில் இருந்து நேற்று முன்தினம் இரவு அராலிப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதனால் பொதுமக்களின் உடைமைகளுக்கு சேதம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அப்பகுதியில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்தனர்.

காரைநகர் கடற்பிராந்தியத்தில் இருந்து நேற்று முன்தினம் காலை முதல் கரையோரம் பகுதிகளை நோக்கி கடற்படையினர் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர்.

இதேவேளை வலந்தலைப் பகுதியிலிருந்தும் பொன்னாலைப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. (உ-3-15)

## மட்டு., அம்பாறை மாவட்டங்களில் அகதி முகாம் தமிழர்கள் விரட்டப்படுகிறார்களாம்!

யாழ்ப்பாணம், நவ. 2

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் அகதிமுகாம்களில் தங்கியிருக்கும் தமிழர்கள் முகாம்களில் இருந்து படையினராலும் தமிழ்க் குழுக்களினாலும் அடித்து விரட்டப்படுவதாகவும்—

விரட்டப்பட்ட அகதிகள் காடுகளில் தஞ்சமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அகதி முகாம்கள் இயங்குவது தடை செய்யப்பட்டதாகக் கூறியே படையினர் அகதி முகாம்களில் இருக்கும் தமிழர்களை விரட்டுகிறார்களாம். (உ-3)

## ஷெல் தாக்கு!

யாழ்ப்பாணம், நவ 2

ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்தும் நேற்றுக் காலை 7 மணியளவில் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

கொம்படி இயக்கச்சி கட்டுவன் கொட்டி பகுதிகளை நோக்கியே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. (உ-3-15)

# சபாநாயகர் முகம்மதுவுக்கு எதிராக மீண்டும் நம்பிக்கையில்லா பிரேரணை

## எதிரணி முன்னறிவிப்பு

கொழும்பு, நவ. 2

சபாநாயகர் எம். எச். முகம்மதுவுக்கு எதிராக மீண்டும் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வர எதிர்க்கட்சி முன்னறிவிப்புச் செய்திருக்கின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, ஐக்கிய சோஷலிச அணி, ஈ. பி. ஆர். எல். எவ். ஆகிய நான்கு கட்சிகளும் இணைந்தே இந்த முன்னறிவிப்பைச் செய்திருக்கின்றன.

எதிர்க் கட்சிகளின் பிரேரணை நேற்று முன்தினம் நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்திடம் கையளிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

ஜனாதிபதிக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணை தொடர்பாக சபாநாயகர் முகம்மது நியாயபூர்வமாக நடந்து கொள்ளவில்லை என்று தெரிவித்து அவருக்கு எதிராக அண்மையில் எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டது தெரிந்ததே.

இப்போது—

நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகளை சபாநாயகர் மீறியுள்ளார் என்று குற்றஞ்சாட்டி இந்தப் பிரேரணை கொண்டுவரப்பட்டிருப்பதாக இந்திய வானொலி நேற்றிரவு அறிவித்தது. (உ-த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

பாவித்த தும்பிலான சேஸ்ரா மெத்தைகள். ஸ்பொஞ்ச் மெத்தைகள் தனி பஞ்சு. தும்பு மெத்தைகள் அனைத்தும் நியாயமான விலையில் கொள்வனவு செய்யப்படும்: உடன் தொடர்பு: காலை 9-1 மணி வரை. புதிய இல. 234. கே. கே. எஸ். வீதி. யாழ்ப்பாணம் [வைத்தி லிங்கம் கம்பனிக்கு அருகாமையில்] (18594)

காரியாலய அனுபவமுள்ள ஆண் லிகிதர் ஒருவர் தமிழ் தட்டெழுத்தறிவுடன் தேவை. தகுதியுள்ளோர் 05-11-1991க்கு முன்னர் 15, கொழும்புத்துறைச்சாலை, கண்டிக்குளி என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும். செயலாளர், வடமாகாண அரசாங்க ஒப்பந்தகாரர் சங்கம் (18595)

### தவறிவிட்டது

செல்வரடணம் ரவீந்திரன் ஆகிய எனது மூக்குக்கண்ணாடி [உறையுடன்] 30 - 10 - 91 அன்று தபால் பெட்டி ஒழுங்கையிலிருந்து யாழ். கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி வரையான பகுதிக்குள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 345, தாவளயடி ஒழுங்கை, திருநெல்வேலி எனும் முகவரியில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (18586)

நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலயத்துக்குச் சொந்தமான 2/- பெறுமதியுடைய 600 டிக்கற்றுகள் கொண்ட இல. 1801 தொடக்கம் 2400 வரையுள்ள அர்ச்சனை டிக்கற் புத்தகம் ஒன்று புரட்டாதிச் சனி காலத்தில் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஆலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (18593)

### அம்பாள் திருமண சேவை

30 வயது B. Sc பொறியியலாளருக்கும், 28 வயது M Sc (கம்பியூட்டர்) க்கும், 28 வயது B A. (Hons) விரிவுரையாளருக்கும் மணப்பெண்கள் தேவை. ஞாயிற்றுக்கிழமைகளில் தொடர்பு கொள்ளவும். விண்ணப்ப முற்பணம் ரூபா 50/-. சின்னச்சாமிக் குருக்கள் சண்முகஐயர், வீரமாகாளி அம்மன் கோவில் வீதி. நல்லூர், யாழ்ப்பாணம். (18422)

### இடமாற்றம்

வேலணை வைத்தியர் சி இராசரத்தினம், 121, 2ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தில் சிகிச்சைகளைத் தொடர்கிறார். சகல நோயாளர்களும் சிகிச்சை வழமைபோல் பெறலாம். இடம்பெயர்ந்தோருக்கு சலுகை அடிப்படையில் சிகிச்சை அளிக்கப்படும் (18590)

### சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? தொழில் வெற்றி பெறுமா? விவாகம் நடைபெறுமா? வெளிநாடு போகலாமா? உங்கள் வினாக்கள் எவையானாலும் உரிய பதில் தரப்படும். ஜாதகம், குறிப்பு எழுதவும், கைரேகை விவாகப் பொருத்தம், எண் சோதிடம் பார்ப்பதற்கும் தொடர்பு: த சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 884, கோவில் வீதி, நல்லூர். [18575]

## கலை, வர்த்தகக் கல்லூரி

C C. A.

யாழ்ப்பாணம்.

DAY CLASS

## A/L 92

பொருளியல்: — உதயன்

கணக்கியல்: — ஸ்ரீ

வர்த்தகம்: — இரட்டினம்

அளவையியல்: — பிரபல ஆசிரியர்

குறிப்பு: பாடசாலை செல்லாத மாணவர்களே அனுமதிக்கப்படுவர்.

ஆரம்பம்: 06—11—1991 காலை 8 மணிக்கு

## A/L 92

கவனத்திற்கு

புவியியல்: திரு. வேலாயுதபிள்ளை

ஆரம்பம்: 03—11—1991 ஞாயிறு 1—2

[கி 0769]

## ● 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி ●



சசிகலா தேவராசா

மலர்வு: 16-08-1980

உதிர்வு: 02 11-1987



மாணிக்கம் சிவகாந்தராஜா

மலர்வு: 19 04-1954

உதிர்வு: 02-11-1987

மதி கெட்ட காலன் ஷெல் உருவினில் வந்தானே!
கதியில்லை எமக்கு - கண்ணீருக்கு ஓய்வுமில்லை!
எம் இதயத்தில் என்றும் வாழ்வீர்!

அன்புப் பெற்றோர்,
சகோதரர்,
உற்றார், உறவினர்கள்.

சிலம்புப் புளியடி,
சங்கானை.

[18593]

## பூப்புனித நீராட்டு விழா

### ★ அழைப்பு ★

நிகழும் பிரசோற்பத்தி வருடம் ஐப்பசி மாதம் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை [03-11-1991] காலை 9.04 மணி முதல் 10 34 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில்,

எமது சிரேஷ்ட புத்திரி திருநிறை செல்வி

## சுபா

அவர்களுக்கு

பூப்புனித நீராட்டு விழா நடாத்த நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் சுற்றம் சூழ வருகைதந்து செல்வியை ஆசீர்வதித்து மகிழ்விக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:
சி. சுந்தரலிங்கம் [ஈழத்திபன்]
[ஆசிரியர் - பிரபல பத்திரிகையாளர்]
சு. பாரததேவி.

''தேவி இல்லம்'',
பத்தியவத்தை, வதிரி மேற்கு,
கரவெட்டி.

[18589]

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



### ★ செல்வன் தே. பிரசாத் ★

செங்குந்தா வீதியில் வசிக்கும் தேவராஜா - புஸ்பலதா தம்பதிகளின் செல்வப் புதல்வன் பிரசாத் தனது முதலாவது பிறந்த நாளை இத்தாலியில் கொண்டாடுகிறார்.

(18421)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 2 — 11 — 1933

நிறைவு: 3 — 10 — 1991

### அமரர் க. சோமசுந்தரம்

(பிரபல வர்த்தகர்)

எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்;

மனைவி, பிள்ளைகள்,
உறவினர்கள், நண்பர்கள்.

ஸ்ரீ தங்காசனம்,
83/...,
...,
யாழ்ப்பாணம்.

[18571]

## சித்த மருத்துவமும், அறுவை மருத்துவமும் கல்வி ஆண்டு 1990/91

மேற்படி பயிற்சி நெறியிலுள்ள 2 ஆம், 3 ஆம். 4 ஆம், 5 ஆம் வருட மாணவர்களுக்கான புதிய கல்வி ஆண்டு 04-11-1991 ஆரம்பமாகும்.

·பதிவாளர்.
யாழ். பல்கலைக் கழகம்

(கி/0871)

## A/L 93

சனி–ஞாயிறு

### 9.00- Chemistry - திரு. மகாதேவா

ஆரம்பம்: 02 - 11 - 1991 (இன்று)

மேற்படி வகுப்புக்கான பிரவேசப் பரீட்சையில் சித்தி அடைந்தவர்கள் 02 - 11 - 1991க்கு முன் தமது அனுமதியைப் பெறாவிடில், அந்த இடங்கள், அனுமதிக்காக காத்திருக்கும் அடுத்த மாணவர்களுக்கு வழங்கப்படும்.

## BOND INSTITUTES

58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[4370]

## நவம்பர் 5 முதல்

# O/L

DECEMBER 90
(தடைப்பட்ட பரீட்சை)
DECEMBER 91

மாணவர்களுக்கான

## PAPER CLASS

கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி, தமிழ், ஆங்கிலம், வர்த்தகம்.

★ கணிதம் ★
திரு. V. T. ராஜேந்திரா

## ஸ்ரார் அரியாலை,

[18584]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 11 — 11 — 1940



உதிர்வு: 04 — 10 — 1991

திருமதி

### மணிமேகலை இராசலிங்கம்

எங்கள் இல்லத்தின் இணையில்லாத் தலைவியாய் விளங்கி, மனையும் சுற்றமும் பேணிக்காத்து, பாசமுடன் எம்மையெல்லாம் அரவணைத்து, புவி மீது வாழும் வழி அமைத்து, அன்பின் உறைவிடமாய், பண்பின் சிகரமாய் வாழ்ந்து, தோன்றாத் துணையாக எம் நினைவுகளில் என்றென்றும் வாழும் எங்கள் பாசத் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் ஈமக்கிரியைகளில் கலந்து கொண்டவருக்கும், மற்றும் எல்லா வழிகளிலும் உதவி நல்கியோருக்கும் நன்றி நவில்கிறோம். அத்துடன் 02 - 11 - 1991 இன்று நடைபெறும் அந்தியேட்டி வைபவத்திலும், 03 - 11 - 1991 நாளை நடைபெறும் வீட்டுக்கிருத்திய வைபவத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் வேண்டுகிறோம்.

கணவன், மக்கள், மருகர்,
சகோதரர்கள், உறவினர்கள்.

தாவளையடி ஒழுங்கை,
திருநெல்வேலி.

[18592]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## துடிப்பில்லாத ஒன்று கூடல்!

வடக்கு - கிழக்கில் இன்னும் யுத்தம் ஓயவில்லை. யுத்தத்தை நிறுத்தும் உத்தேசம் அரசுக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

தெற்கில் ஜனாதிபதிக்கும், ஐ. தே. கட்சி அதிருப்தியாளர் குழுவுக்கும் இடையேயான "யுத்தமும்" தொடர்ந்து கொண்டே இருக்கிறது. பிரதான எதிர்க் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளும் உள்வீட்டுப் "போர்" நீடிக்கிறது.

இத்தனை போர்களுக்கும் மத்தியில் தெற்காசிய மன்றமான "சார்க்" அமைப்பின் உச்சி மாநாடு கொழும்பில் எதிர்வரும் ஏழாம் திகதி ஆரம்பமாக உள்ளது.

"சார்க்" அமைப்பின் அங்கத்தவர்களுக்கு இடையிலேயே பல முரண்பாடுகளும், கருத்து மோதல்களும் நிலவுகின்றன!

இந்தியாவும் பாகிஸ்தானும் இன்னமும் பரம எதிரிகளாகவே இருக்கின்றன. எல்லைப் பகுதிகளில் எப்போதும் போர் வெடிக்கக் கூடிய நெருக்கடி நிலை நிலவி வருகிறது. ஒரு நாட்டுப் படையினர் அடுத்த நாட்டுக்குள் ஊடுருவி வருவதாக இரு சாராரும் அடுத்த தரப்பினர் மீது மாறி மாறிக் குற்றஞ்சாட்டி வருகின்றனர். பிரச்சினைகளைத் தீர்ப்பது குறித்து இப்போதும் வெளிவிவகாரச் செயலாளர்கள் மட்டத்தில் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது.

இதே போல ஸ்ரீலங்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் பல பிரச்சினைகளும், மோதல்களும், முரண்பாடுகளும் உள்ளன. இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை அமுல் செய்ய வேண்டும் என்பதில் புதுடில்லி விடாப்பிடியாக நிற்கிறது. தமிழகத்தில் உள்ள ஈழத் தமிழ் அகதிகளை பராமரிப்பதில் நிதி வளம் தேய்வதால் அவர்களை எப்படியும் திருப்பி அனுப்பி விட வேண்டும் என்பதும் இந்தியாவின் விருப்பம். மீண்டும் ஓர் இந்திய ஆக்கிரமிப்புக்கு இடம் கொடுக்கக் கூடாது என்பதில் ஜனாதிபதி பிரேமதாசா உறுதியாக இருக்கிறார். உள்நாட்டு விவகாரத்தில் இந்தியா தலையிடுவதையும் அவர் விரும்பவில்லை.

இவ்வாறாக 'சார்க்' அங்கத்தவர்களுக்கிடையே பல முரண்பாடுகள். ஆனால் அங்கத்தவர்களின் பரஸ்பர பிரச்சினைகளை, உள் விவகாரங்களைப் பரிசீலனைக்கு எடுப்பதில்லை என்ற மூடிமறைக்கும் கொள்கையுடன் மாநாடு நடக்கப்போகிறது.

பொருளாதாரம், வர்த்தகம், அபிவிருத்தி, தொழில் நுட்பம் ஆகிய துறைகளில் ஒத்துழைத்துச் செயற்படுவதே "சார்க்"கின் பிரதான கொள்கை. அதன் காரணமாக 'சார்க்' மாநாடு பெரும் முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் திருப்பங்களை உருவாக்கும் என்று எதிர்பார்க்க இடமில்லை. மொத்தத்தில், அது உச்சிமாநாடாக இருந்தாலும் 'சப்புக் கொட்டும்' நிகழ்வாகவே அமையும்.

இந்தத் உயிர்த்துடிப்பில்லாத மாநாட்டுக்குக் கொழும்பில் தடபுடல் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அயல் நாடுகளின் தலைவர்கள் பங்குபற்ற இருப்பதால் பாதுகாப்பு நடவடிக்கைகளும் தீவிரமாக நடக்கின்றன.

ஒட்டுமொத்தத்தில் கொழும்பில் நடக்கவிருக்கும் 'சார்க்' மாநாடு உடனடியான விளைவுகளைத் தருவதற்குச் சக்தியற்ற வெறும் கூடலே! பகட்டான, டாம்பீகக் கூட்டம் நடத்திப் பேசிக் கலையும் நிகழ்வாகவே அமையும்.

## பூவரசம்தீவிலும் படையினர்

குருநகர், நவ. 2

பூநகரி — கல்முனை இராணுவத்தினர் பூவரசம் தீவுப் பகுதிகளிலும் நடமாடுவதாக கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அரியாலை கிழக்குக் கடல் ஏரிக்கு நேரெதிரில் தனியாக அமைந்திருக்கும் பூவரசம் தீவுக்கு பூநகரி — கல்முனை இராணுவத்தினர் வள்ளங்களில் வந்து செல்லுகின்றனராம்.

அரியாலை ஏரிக்கடலில் கடற்றொழிலில் ஈடுபடும் மீனவர்கள் இராணுவத்தினரை அத்தீவில் கண்டதாகத் தெரிவித்துள்ளனர். [உ-51]

## அகதி முகாமில் வகுப்புகள்

யாழ்ப்பாணம், நவ. 2

ஊர்காவற்றுறைக் கொத்தணியில் இருந்து இடம்பெயர்ந்து பின்னர் தற்போது நாவற்குழி அகதி முகாமில் தங்கியுள்ள மாணவர்களுக்கு விசேட வகுப்புகள் நாளை மறுதினம்முதல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

அந்தக் கொத்தணியில் கடமையாற்றும் ஆசிரியர்கள் இந்த வகுப்புகளை நடத்துவர்.

அகதி முகாமிலேயே வகுப்புகள் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. [உ-3]

## தேசிய ஒருமைப்பாட்டுக் கூட்டம்: தி.மு. கழகம் பகிஷ்கரிக்க முடிவு

சென்னை, நவ. 2

புதுடில்லியில் இன்று நடைபெறவிருக்கும் தேசிய ஒருமைப்பாட்டுக் கவுன்ஸில் கூட்டத்தில் கலந்து கொள்வது இல்லை என்று திராவிட முன்னேற்றக் கழகம் முடிவு செய்துள்ளது.

தேசவிரோதச் செயல்களில் தி.மு.க. ஈடுபட்டு வந்ததாக பாதுகாப்புத்துறை இணை அமைச்சர் திரு.எஸ்.கிருஷ்ணகுமார் அறிக்கை ஒன்றில் கூறியிருந்ததற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே இம்முடிவு எடுக்கப்பட்டதாக தி.மு.க வின் தலைவர் மு.கருணாநிதி தெரிவித்தார். (இ-த)

## வவுனியாவில் சிவில் நிர்வாகம்: அரசாங்க தரப்பில் முயற்சி

வவுனியா, நவ. 2

வவுனியா மாவட்டத்தில் சிவில் நிர்வாகத்தை மீண்டும் ஏற்படுத்த தேவையான சகல நடவடிக்கைகளையும் எடுப்பதென்று அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

அமைச்சரவைப் பேச்சாளர் திரு. ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டில் இத்தகவலைத் தெரிவித்தார்.

வவுனியாவில் உணவுப் பொருள்களை விநியோகிப்பதென்றும், விடுதலைப் புலிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட பகுதிகளில் பஸ் சேவைகளை ஆரம்பிப்பதென்றும், வவுனியா நகரசபையிடம் இருந்து மின்சார விநியோகத்தை மின்சாரசபை பொறுப்பேற்க உடனடி நடவடிக்கை எடுப்பதென்றும் அமைச்சரவை மேலும் தீர்மானித்துள்ளது. [இ-த]

## ஆஸ்பத்திரிக்கு மருந்து வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம், அக். 2

யாழ். ஆஸ்பத்திரிக்கு இவ்வருடத்தின் நான்காவது காலாண்டுக்குரிய மருந்து வகைகளில் ஒரு பகுதி கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ளது.

ஆஸ்பத்திரியின் பாவனைக்குரிய டீசல் மற்றும் டாக்டர்கள், ஊழியர்களின் பாவனைக்குரிய பெற்றோல், மண்ணெண்ணெய் என்பனவும் கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளன. [உ-15]

## வெளிச்சக் கண்காணிப்பு

யாழ்ப்பாணம், நவ. 2

யாழ்ப்பாண நகரப் பகுதியில் நேற்றிரவு 6-30 மணி தொடக்கம் 7-15 வரை அடிக்கடி கப்பலிலிருந்து பாய்ச்சப்படும் கண்காணிப்பு வெளிச்சம் [சேர்ச் லைற்] தென்பட்டது.

மண்டைதீவுப் பகுதியில் தரித்து நிற்கும் கப்பலில் இருந்து இந்தக் கண்காணிப்பு வெளிச்சம் பாய்ச்சப்பட்டது. [அ-131-15]

## விசர்நாய்க் கடியினால் 12 பேர் பலி

யாழ்ப்பாணம், நவ. 2

விசர்நாய்க் கடிக்கு இலக்காகி இந்த வருடத்தில் மட்டும் 12 பேர் யாழ். குடாநாட்டில் இறந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் — யாழ் பிராந்திய பணிப்பாளர் திரு. என். கனகசபை இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

விசர்நாய்க்கடி நோய்க்கு ஆளானோர் மரணமடைவது நிச்சயமாதலால்—

விசர்நாய்க்கடி ஏற்படுவதைத் தவிர்க்க உரிய முன்னேற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்றும்—அவர் வலியுறுத்தி உள்ளார்.

பொதுஇடங்களிலும், வீதிகளிலும், கிராமங்களிலும் அலைந்து திரியும் நாய்களை ஒழிப்பதற்கு சுகாதாரப் பகுதியினரை நாடும்படியும்—

இத்தகவலை யாழ்ப்பாண சுகாதார அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பு நல்கும்படியும் அவர் கேட்டுள்ளார். [உ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் தொண்டமான், ஹமீத் உட்பட 23 அரச தரப்பு எம்.பிக்கள்

கொழும்பு, நவ. 2

நாட்டில் அமைதியையும் அரசியல் ஸ்திரத்தையும் நிலை நிறுத்துவதற்காக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் இடம்பெறும் 23 அரச எம்.பிக்களின் பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளன.

சுதந்திரக்கட்சி எம். பி. மங்கள முனசிங்க தலைமையிலான இத்தெரிவுக் குழுவில் இடம்பெறும் ஐ. தே. க. எம்.பிக்களின் பெயர்கள் வருமாறு:

விஜேபால மென்டிஸ், சாகுல் ஹமீத், பெஸ்டஸ் பெரேரா, எஸ். தொண்டமான், ரணில் விக்கிரமசிங்கா, பி. தயாரத்னா, டபிள்யு. ஜே. எம். லொக்குபண்டார, கே. டி. எம். ஸி. பண்டார, ஏ. ஆர். எம். மன்சூர், வீரசிங்கா மல்லிமாரச்சி, கமினி அத்துக்கோறளை, சந்திரா ரணதுங்கா, போல்பெரேரா, ஹரேந்திரா கொரியா, டாக்டர் விமல் விக்கிரமசிங்கா, திருமதி புலேந்திரன், ஏ.எச்.எம். அஸ்வர், டிரோன் பெர்னாண்டோ, எம். எஸ். செல்லச்சாமி, எச். தணுவில, எச். ஆர். பியசிறி, ரி. ஜெயசிங்க, புத்தி குருகுலரத்னா.

இதே வேளை — இந்த நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு அரசு தரப்பில் இருந்து 23 எம்.பிக்களையும் எதிர்க்கட்சிகள் தரப்பில் இருந்து 20 எம்.பிக்களையும் நியமிப்பது குறித்து பரிசீலனை செய்யுமாறு நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்தை சபை முதல்வர் ரணில் விக்கிரமசிங்கா கேட்டுள்ளார். (இ-எ)

## மத்திய கிழக்கு மாநாடு: நேருக்கு நேர் பேச்சு நாளை ஆரம்பமாகும்

மாட்றிட், நவ. 2

மத்திய கிழக்கு சமாதான மாநாட்டின் பூர்வாங்கப் பேச்சு வார்த்தைகள் எவ்வித உருப்படியான முடிவும் இல்லாமல் நேற்று முடிவடைந்தன.

எனினும் இரு சாராருக்கும் இடையில் நேருக்கு நேர் பேச்சுவார்த்தை நாளை ஞாயிற்றுக்கிழமை மீண்டும் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் நேற்றைய பேச்சுக்கள் தாமதமாகவே ஆரம்பமாகின.

இஸ்ரவேலியப் பிரதமர் இத்ஷாக் ஷமீரும் சிரிய வெளிநாட்டமைச்சரும் சொற்போர் நடத்தினர். இஸ்ரவேலியப் பிரதமரின் இளம்வயதுப் படம் ஒன்றைக் காட்டி, அவர் பயங்கரவாதி என்ற காரணத்தினால் தேடப்பட்டு வந்தவர் என்று சிரிய அமைச்சர் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்தே இருவருக்கும் இடையில பெரும் வாக்குவாதம் மூண்டது.

அதைத் தொடர்ந்து இஸ்ரவேலியப் பிரதமர் அவசரமாக டெல் அவிவ் திரும்பி விட்டார். (அ-த)

## சிறிய கப்பல்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அழைத்துச் சென்று நடைமுறைச் சாத்தியங்களை ஆராய்ந்தனர்.

பருத்தித்துறையில் செய்வது போல பெரிய கப்பல்களைக் கொண்டு வந்து ஆழக் கடலில் தரிக்க வைத்து, இழுவைப் படகுகள் மூலம் பொருள்களைக் கரை சேர்க்கும் சாத்தியம் காங்கேசனில் மிகக் குறைவு என்று நிபுணர்கள் தெரிவிக்கிறார்கள்.

கடலின் ஆழம் [Depth] தன்மை (Roughness) என்பன பெருங் கப்பல்கள் வரச் சாதகமாக இல்லை என்றும் கண்டறியப்பட்டுள்ளது.

இதனால் பருத்தித்துறை துறைமுகத்துக்கு வரும் குமாரி, குமண, விக்கி போன்ற ஓரளவு பெரிய கப்பல்களை காங்கேசன் துறை துறைமுக இறங்குதளம் வரை கொண்டுவர முடியாது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை உணவுப் பொருள்களை இறக்குவதற்கு வசதியாக தெரிவு செய்யப்பட்ட பகுதியைப் பாதுகாப்புப் பிரதேசமாக்குவது [Security Zone] குறித்து அரசாங்கத்துடனும், விடுதலைப் புலிகளுடனும் இணக்கம் காண்பதற்கான பேச்சுவார்த்தைகள் இப்போது நடந்து வருகின்றன.

கப்பலில் இருந்து இறக்கப்படும் பொருள்களை எந்தப் பாதையால் கொண்டு வருவது லொறிகள், தரிப்பதற்கும், தொழிலாளர்கள் தங்குவதற்குமான வசதிகள், பாதுகாப்புப் பிரதேசப் பகுதியைத் தெரிவு செய்வது என்பன சம்பந்தமாகவே பேச்சுக்கள் நடக்கின்றன.

இப்பேச்சுக்கள் அனேகமாக அடுத்த வாரமளவில் வெற்றி தரக்கூடிய சாத்தியம் உண்டு என்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

காங்கேசன் துறைமுகத்துக்குச் சிறிய கப்பல்கள் கொண்டு வரப்பட்டாலும், பருத்தித்துறையில் தொடர்ந்தும் பெரிய கப்பல்கள் மூலம் உணவு பொருள்கள் இறக்கப்படும் என்றும் அவர் கூறினார். [அ-3]

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 2

நல்லூர், யாழ்ப்பாணப் பகுதி சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவு உத்தியோகத்தர்களுக்கான விசேட கலந்துரையாடல் ஒன்று இன்று மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. [உ-15]

## நாடகம்

யாழ்ப்பாணம், நவ. 2

யாழ். ஆத்திசூடி கலைமகள் சனசமூக நிலைய கலாசாரப் பேரவையின் ஆதரவில், நவாலியூர் இ. என். செல்லத்துரையின் "கண்டியம்பதிக் காவலன்" என்ற நாடகம் இன்று நடைபெறுகிறது.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் பி. ப. 3 மணிக்கு நாடகம் ஆரம்பமாகும். (அ)

## விடுதலை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பேரில் குமார் ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் அந்த அமைப்புக் கலைக்கப்பட்டது.

இப்போது ஜனாதிபதியின் அங்கீகாரத்துடன் பிரஸ்த படை மீள அமைக்கப்படுவதாகப் பாதுகாப்புப் படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இராணுவச் செயற்பாடுகளுக்குப் புத்துயிர் அளிக்கும் ஒரு நடவடிக்கையாகவும் கூட்டு நடவடிக்கைப் படை மீண்டும் ஆரம்பிக்கப்படுகிறது. (அ-த)

## 6 ஆம் திகதிக்குமுன் உதவிப் பணம்

யாழ்ப்பாணம், நவ. 2

வன்செயல்கள் காரணமாக இடம் பெயர்ந்துள்ளவர்களில் தெல்லிப்பளை உதவி அரச அதிபர் பணிமனையில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்கள் எதிர் வரும் 6 ஆம் திகதிக்கு முன் தமது உதவிப் பணத்தைப் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (த)


# O/L

பரீட்சைக்கு தயாராகும் மாணவர்களுக்காக,
அனைத்து பாடங்களுக்குமான

## PAPER CLASS

ஆரம்பம்: 2-11-1991

வினா - விடை வகுப்புகளின் முடிவில் அனைத்துப் பாடங்களுக்குமான பயிற்சிப் பரீட்சை எமது மாணவர்களுக்காக நடத்தப்படும்.

**BOND INSTITUTES,**
58 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். [4371]



இன்று ஆரம்பம்

## NEW SCIENCE ACADEMY
JAFFNA.

# 91, 92 A/L

தூய, பிரயோக கணிதம்

★ திண்ம கேத்திர கணிதம்
★ தளக் கேத்திர கணிதம்
★ வரிசை மாற்றமும், சேர்மானமும்
★ நிகழ்தகவு புள்ளி விவரவியல்

ஆசிரியர்:
திரு. வெக்டர்

ஆரம்பம்: 2-11-1991
Sat. 10-00 A.M.

[சி/0872]



# A L - 93

சனி, ஞாயிறு

| | | | |
|---|---|---|---|
| 8-00 | PHYSICS | — | திரு. அருள்தாஸ் |
| 9-00 | CHEMISTRY | — | திரு. மகாதேவா |
| 10-00 | BOTANY | — | திரு. ஸ்ரீதரன் |
| 10-00 | PURE MATHS | — | திரு. லக்ஷ்மன் |
| 11-00 | ZOOLOGY | — | திரு. K.சிவபாதம் |
| 11-00 | APP. MATHS | — | திரு. லக்ஷ்மன் |
| 1-00 | PHYSICS | — | திரு. ரவீந்திரநாதன் |
| 2-00 | CHEMISTRY | — | திரு. D S. சோதி |
| 3-00 | BOTANY | — | திரு. சதீஸ் |
| 3-00 | PURE MATHS | — | திரு. மகேஸ்வரன் |
| 4 00 | ZOOLOGY | — | திரு. விக்னேஸ்வரன் |
| 4 00 | APP- MATHS | — | திரு. மகேஸ்வரன் |

ஆரம்பம்: 02 - 11 - 1991 (இன்று)

**BOND INSTITUTES**

58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[4373]



## மீண்டும் ஒரு விலை குறைப்பு

பாணின் விலை ரூபா 7/50 - நிறை 350 கிராம்

தற்போதைய நெருக்கடி நிலையை கருத்திற் கொண்டு இன்று முதல் (02-11-91) பாணின் விலை ரூபா 7/50 ஆகவும், நிறை 350 கிராம் ஆகவும் இருக்க வேண்டுமென எமது சங்கம் தீர்மானித்துள்ளது. ஆகவே இதை மீறும் பேக்கரி உரிமையாளர்களுக்கு மா விநியோகம் நிறுத்தப்படும். இதை மீறும் பாண் விற்பனையாளருக்கு பாண் விநியோகம் நிறுத்தப்படும். பாணின் விலை, நிறை, தரம் ஆகிய குறைபாடுகளை பொது மக்கள் எமக்கு எழுதவும்.

திரு. ந. பாலவிநாயகர்
இல. 3, கண்டிவீதி,
பஸ்தியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

செயலாளர்,
யாழ். மாவட்ட பேக்கரி
உரிமையாளர் சங்கம்
[18590]


## மிருசுவிலில் ஹெலித் தாக்கு

யாழ்ப்பாணம், நவ. 2

மிருசுவில் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் ஹெலிக்கொப்டரில் இருந்து கலிபர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

சுமார் 10 நிமிடநேரம் இடம்பெற்ற இத் தாக்குதல் சம்பவத்தில் சில வீடுகள் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-15)


## ★ நடன நிகழ்ச்சி ★

திருமதி விமலினி சுகந்தன்
அவர்களின்
மாணவர்களின் நடன நிகழ்ச்சி

இடம்: தொழில் நுட்பக்கல்லூரி,
வட்டுக்கோட்டை.

காலம்: 02-11-91 (இன்று)
பிற்பகல் 1 மணி

அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்.

திருமதி வி. சுகந்தன்,
மூளாய்.

[18597]


# மரண அறிவித்தல்கள்

## திருமதி மனோன்மணி நடராசா

திருமதி மனோன்மணி நடராசா 1-11-1991 காலை காலமானார். அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி நடராசா [Retd. Head Guard, C. G. R.]வின் அன்பு மனைவியும், Dr. சர்வானந்தா [அரசினர் வைத்தியசாலை, அனலைதீவு], யோகேஸ்வரி [U. K.], பரமேஸ்வரன் (France, முன்னைநாள் லிகிதர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை, சண்டிலிப்பாய்] ஆகியோரின் அன்புத் தாயாரும், கமலநாயகி, தெட்சணாமூர்த்தி [U. K.], ஜெகதாம்பிகை ஆகியோரின் அன்பு மாமியாரும், தர்சினி, கணேஸ்குமார், மனோஜ், மோகன், பிரபாகரன், பிரதீபன், மாலதி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் (2-11-1991) இன்று காலை 10-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந. சர்வானந்தா,
(மகன்)
சோமசுந்தரப்புலவர் வீதி,
நவாலி வடக்கு,
மானிப்பாய். (18591)

## திருமதி அக்கினேஸ் சாள்ஸ்
[சின்னத்தங்கச்சி]

திருமதி அக்கினேஸ் சாள்ஸ் [சின்னத்தங்கச்சி] காலமாகிவிட்டார்.

இவர் காலம்சென்ற திரு. சாள்ஸ் அவர்களின் அன்பு மனைவியும், திருமதி றோஸ், காலம்சென்ற விக்ரர், திருமதி குயின், திரு. மரியநாயகம் இவர்களின் அன்புத் தாயாரும், திரு. சபாரட்ணம், திரு. மங்களம் இராஜேந்திரம், லீலா, ஜெயா இவர்களின் மாமியாரும், வணக்கத்திற்குரிய இம்மானுவேல் [S. S. J], காலம்சென்ற கொலின்ஸ், எட்வேட், வில்லியம் இவர்களின் சிறியதாயாரும், றஞ்சினி, றாகினி [கனடா], தர்மினி [ஜேர்மனி], நந்தினி [இந்தியா], அமிதா [ஆசிரியை], பவானி [கனடா], பிறேமி, கௌரி [ஆசிரியை], ஐடா [ஆசிரியை], மல்கம், நிலக்சி, அருந்ததி [ஜெனீவா], ஆனந்தி [ஜெனீவா] இவர்களின் அன்புப் பேத்தியும், பிறயன், பிரியாந்தி, டினேஸ், திரேஸ், ஸரீனா இவர்களின் பூட்டியுமாவார்.

அன்னாரது பூதவுடல் நல்லடக்கத்துக்காக இல. 186, கண்டி வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இருந்து புனித. கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு 2-11-1991 [இன்று] பிற்பகல் 2-30 மணியளவில் எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் தருபவர்கள்:
திருமதி றோஸ் சபாரட்ணம்
திருமதி குயின் இராஜேந்திரம்
இல. 186, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். [18425]

## பாண்: ரூ. 7-50

பாணின் விலை இன்று இரண்டாம் திகதி முதல் 7 ரூபா 50 சதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. அதன் நிறை 350 கிராமாக இருக்கும் என்று யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது. நேற்று வரை பாண் 8 ரூபாவாக விற்கப்பட்டு வந்தது.

## டிக்ஸிற் நியமனம் ஊர்ஜிதம்!

இந்திய வெளியுறவுத் துறையின் புதிய செயலாளராக ஜே. என். டிக்ஸிற் நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று புதுடில்லியில் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

தற்போதைய செயலாளர் முச்குந்த் துபே இம்மாதம் 30 ஆம் திகதியுடன் ஓய்வு பெற, அவரின் பொறுப்பை டிக்ஸிற் ஏற்றுக் கொள்வார்.

# மரண அறிவித்தல்கள்

## செவ்வந்திநாதன்

வேலணை மேற்கைச் சேர்ந்த முருகேச பிள்ளை செவ்வந்திநாதன் காலமானார்.

இவர் காலஞ்சென்ற முருகேசபிள்ளை - பவளம் தம்பதிகளின் புதல்வனும், இராசலெட்சுமியின் அன்பு கணவரும், பாலசுப்பிரமணியம், சிவமணி [ஜேர்மனி] இவர்களின் சகோதரரும், முகுந்தன், மகிந்தன், ஜெயந்தன், பிரியதர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற துரையப்பாபிள்ளை-பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் ஆவரர்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் [02-11-1991] இன்று சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் இல 22, விபுலானந்தர் வீதி, கொழும்புத்துறையில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல்:
பொ. தர்மலிங்கம்
22, விபுலானந்தர் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம். (18426)

## சபாபதிப்பிள்ளை மங்களேஸ்வரன்

சபாபதிப்பிள்ளை மங்களேஸ்வரன் காலமானார். இவர் காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை [ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்] - திருமதி சரஸ்வதியின் அன்பு மகனும், புஷ்பராணி, ஜெகதீஸ்வரன் ஆகியோரின் அன்பு சகோதரரும், தெய்வமனோகரன் [(கட்டி) - இலங்கை வங்கி, வவுனியா] அவர்களின் அன்பு மைத்துனரும், சசிவன், ராகவன், ஈஸ்வரி ஆகியோரின் ஆசை சின்ன மாமாவும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று [2-11-91] காலை 11 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
குடும்பத்தினர்
வட்டு. தெற்கு.
வட்டுக்கோட்டை.
[18424]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 2-11-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org